இருக்கமுடியாது. அப்படிப்பட்ட அற்புதமான அழகையுடைய மயில் தேசியப் பறவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதைப் பற்றி தெரிந்துகொள்ளக்கூடிய விவரங்கள் ரகசியங்கள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

தமிழ்நாட்டில் சணல் சாகுபடி.

* வினா எண். 188 திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் சணல் சாகுபடியைப் பற்றி ஆராய்ச்சி ஏதும் நடத்தப்பட்டனவா?

(ஆ) இது குறித்து விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) விவர அறிக்கை * அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் தென்னைப் பயிரிடுவதை மேம்படுத்தும் திட்டம்

*வினா எண் 189 திரு. மெ. ஆண்டிஅம்பலம் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மாநிலத்தில் தென்னை வளர்ப்பு திட்டத்தின் மூலம் அடுத்த ஐந்து ஆண்டுகளில் எவ்வளவு உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளது?

(ஆ) இந்த திட்டத்தின் மூலம் விவசாயிகளை மற்ற மாநிலங்களுக்கு அனுப்பி பார்வையிட அரசு முன்வருமா

(இ) சிங்கப்பூர், இலங்கையிலுள்ள ரகங்களை தமிழ் நாட்டில் பயிர் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) அடுத்த ஐந்து ஆண்டுகளில் 1985—86 முடிய கீழ்க்கண்டவாறு தென்னை பயிரிடும் பரப்பளவையும் தேங்காய் உற்பத்தியையும் அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது:—

(உற்பத்தி : கோடி தேங்காய்)

1981-82	1982-83	1983-84
உற்பத்தி.	உற்பத்தி.	உற்பத்தி.
137.30	133	141.70
1984-85	1985-86	
உற்பத்தி	உற்பத்தி	
153.40	169.30	

(ஆ) (இ) திட்டம் ஏதுமில்லை.

* 123ஆம் பக்கத்தில் இணைப்பு-I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தென்னை மரங்களுக்கு நூற்றுக்கணக்கான மரங்களுக்கு நோய்கள் ஏற்பட்டு பாதிக்கப்பட்டு இருக்கிறது. அதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9.40]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அறியும். அதைத் தடுக்க முறையான நடவடிக்கைகளை வேளாண்மைத்துறை எடுத்து வருகிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தென்னை உற்பத்தியில் அரசு அதிக கவனம் செலுத்தி வருகிறது என்பதை விவசாயிகளாகிய நாங்கள் அறிந்திருக்கிறோம். இருந்தாலும், கிராமங்களில் தென்னை உற்பத்தி செய்யும்பொழுது ஏற்கனவே பாதி விலைக்குத் தென்னம் பிள்ளைகளை அரசு கொடுத்து வந்தது. இப்பொழுதும் பாதி விலையில் கொடுக்கும் அந்தத் திட்ட அளவில்தான் இருக்கிறது. இப்படி பாதி விலையில் கொடுப்பது மட்டுமல்லாமல், உரத்தையும் மானியமாகக் கொடுப்பதற்கான வழிவகைகளை அமைச்சரவர்கள் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தென்னை உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் ஒன்பதிற்கும் மேற்பட்ட திட்டங்களை நாம் கடைப்பிடித்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் தந்திருக்கின்ற விவரங்களின்படி இன்னும் அதை அதிகப்படுத்த என்னென்ன ஏற்பாடுகள் செய்ய வேண்டுமோ அவற்றை அரசு செய்யும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கிராமங்களில் தென்னை வளர்ப்பதற்காக முன்பு ஊராட்சி மன்றங்களில் 1/2 பாகம், 2/3 பாகம் என்ற அளவிற்கு மானியம் கொடுத்துத் தென்னைகள் வளர்க்கப்பட்டன. அந்தத் திட்டத்தை இப்பொழுது மீண்டும் அமல்படுத்தவும், ஊராட்சிகளில் கண்டிப்பாக 100 தென்னம்பிள்ளைகளையாவது வைக்க வேண்டுமென்றும் ஆணையிட்டு கட்டாயமாகப் கிராமப் பகுதிகளில் தென்னை வளர்ப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அது குறித்து அரசு ஆராயும்.

1982 பிப்ரவரி 16]

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லும்பொழுது துறை கவனித்து வருகிறது என்று சொன்னார்கள். குறிப்பாகச் சென்ற ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்திலும், தென்னார்க்காடு மாவட்டத்திலும் அதிகமான தென்னை மரங்கள் நோயினால் அழிக்கப்பட்டது அரசுக்குத் தெரியுமா? துறை எந்தெந்த இடங்களைக் கவனித்து வருகிறது என்பதைத் தெரிவிப்பதோடு, இப்படி நோயினால் தென்னை மரங்கள் அழிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவி செய்வதற்கு அரசு முன் வந்ததா? அப்படி எவ்வளவு உதவி செய்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மூலக் கேள்வி, மாநிலத்தில் தென்னை வளர்ப்புத் திட்டத்தின் மூலம் அடுத்த ஐந்து ஆண்டுகளில் எவ்வளவு உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளது என்பது பற்றியது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் நோயைப்பற்றித் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

திரு. பொ. உக்கிரபாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் உரையில் பட்டா வழங்கும்பொழுது ஒவ்வொருவருக்கும் ஒரு தென்னங்கன்றைக் கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டிருந்தது. விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ஒரு தென்னம்பிள்ளையாவது கொடுத்துப் பரவலாகத் தென்னை உற்பத்தி செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தென்னை உற்பத்தியை எவ்வளவு அதிகரிக்கச் செய்ய வேண்டுமோ அந்த வகையில் அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்பதுதான் அரசின் நோக்கம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவிக்கின்ற கருத்துப்படி அரசுக்கு விருப்பம் இருக்கக் கூடும். இருந்தாலும் நிதி நிலைமையைப் பொறுத்துத்தான் நாம் இதை முடிவு செய்ய முடியும்.

கூடுதல் நெல் விளைச்சலுக்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்

* வினா எண் 190.—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

டசுமைப்புரட்சித் திட்டத்தின்கீழ் கூடுதல் நெல் விளைச்சலுக்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : * ஒரு விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

---

* 125ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.